1975 அக்டோபர் 30]

* 127 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி தாலுக்கா, காளாம்பட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளியில் ஆய்வுக்கூடம் கட்டுவதற்கு அரசினரால் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

(இ) எப்பொழுது அதற்கான வேலை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ரூ. 32,000.

(இ) சென்னையிலுள்ள தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) அனுமதியைப் பெற்று திருநெல்வேலியிலுள்ள கோட்ட நிருவாகப் பொறியாளர் இக்கட்டட வேலையைத் தொடங்கியுள்ளார்.

Awards for talented students in Union Secondary Schools.

*128 *Q.*—Thiru R. PONNAPPA NADAR: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether any award is granted to talented pupils selected at the secondary school stage in the Panchayat Union Schools in case they continue their studies in the same school; and

(*b*) whether the award amount is disbursed to the pupils in Kanyakumari district?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கிராமப் புறத்திலிருந்து இடைநிலை கல்விநிலையில் படிக்கும் திறன் மிக்க மாணவர்களுக்கு தேசிய உதவித் திட்டத்தின் கீழ் 1974–75 ஆம் ஆண்டு வரை உதவித் தொகை அளிக்கப்பட்டது. அவ்வுதவித் தொகை கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் அளிக்கப்பட்டது.